பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 26 புதன்கிழமை 11.08.2021 கதிர் 145

## 15,000 'ஸ்புட்னிக் வி' இன்று இலங்கைக்கு

மேலும் 15 ஆயிரம் 'ஸ்புட்னிக் வி' கொரோனாத் தடுப்பூசிகள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

டுபாயிலிருந்து சரக்கு விமானத்தினூடாக இவை இன்று காலை எடுத்துவரப்பட்டுள்ளன.

இதனிடையே, இன்றும் நாட்டின் பல பகுதிகளில் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் கொரோனாவால் இன்று காலை மரணம்



(இ.கலையமுதன்)

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் கோணலிங்கம் கருணானந்தராசா (வயது 76) சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் உடல்நிலை பாதிக்கப்பட்ட அவருக்குப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளது என அறிக்கையிடப்பட்டது.

☞2

## வடக்கு பிரதம செயலருக்கு கொரோனா வைரஸ் உறுதி

### மேலும் இரு மூத்த அதிகாரிகளுக்குத் தொற்று

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண சபையின் புதிய பிரதம செயலாளர் சமன் பந்துலசேனவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அவரின் துணைவியாருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் பிரதம செயலாளருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே பிரதம செயலாளருக்குக் கொரோனா

☞2

# தவறை உடனே திருத்திக்கொள்ளாவிடின் கூண்டோடு அகற்றப்படுவர் ராஜபக்ஷக்கள்

### அடித்துக் கூறுகின்றார் முருந்தெட்டுவே ஆனந்த தேரர்

**படுமோசமான அரசை உருவாக்குவதற்கு முன்னின்று செயற்பட்டதால் நரகத்துக்குச் செல்ல நேரிடும் என நாட்டு மக்கள் எம்மை விமர்சிக்கிறார்கள். மக்கள் வழங்கிய பெரும்பான்மைப் பலம் தவறாகச் செயற்படுத்தப்படுகின்றது. அரசு தவறுகளை உடனடியாகத் திருத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிடின் ராஜபக்ஷக்கள் அனைவரும் வெகுவிரைவில் அரசியலில் இருந்து மக்களால் ஓரங்கட்டப்படுவார்கள்.**

**- இவ்வாறு அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.**



☞2

### வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில்

## இளம் தாயும் 7 நாள் குழந்தையும் கொரோனாவால் பரிதாபச் சாவு

(வவுனியா நிருபர்)

வவுனியா, பட்டக்காடு பகுதியைச் சேர்ந்த இளம் தாயும் அவரது 7 நாள்களேயான குழந்தையும் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

தொற்றுக்கு இலக்கான குறித்த பெண் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த வாரம் சிசேரியன் மூலம் குழந்தை பெற்றுக்கொண்டார்.

குழந்தையும், தாயும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி இருந்த நிலையில், தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்நிலையில் இருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

## மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டது பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி

### பாதுகாப்பு உத்தியோகத்தருக்குக் கொரோனா

(இ.கலையமுதன்)

தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறை கிளையின் பாதுகாப்பு உத்தியோகத்தருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் அந்தக் கிளையில் பணியாற்றும் அனைவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதனால் வங்கியின் பருத்தித்துறைகிளையை மறு அறிவித்தல் வரை மூடுமாறு சுகாதார வைத்திய அதிகாரியால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய சேமிப்பு

☞2

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 138 பேர் கைது!

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 138 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 53 ஆயிரத்து 942 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண

☞2

## 131 கிலோ கேரள கஞ்சா கடத்தல் முறியடிப்பு; இருவர் சிக்கினார்கள்

(ந.லோகதயாளன்)

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் கடத்த முற்பட்ட 131 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.



இந்தியாவில் இருந்து மன்னாருக்குக்

☞2

## குடும்பப் பகை காரணமாக காதலுக்குப் பெற்றோர் எதிர்ப்பு; காதலன் உயிர்மாய்ப்பு; காதலி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில்

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

நீண்டகால குடும்பப் பகை காரணமாக காதலுக்குப் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்தமையால், காதலர்கள் தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்க முனைந்த நிலையில் காதலன் உயிரிழந்துள்ளார். காதலி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உறவு முறையான 19 வயது இளைஞரும், 17 வயது சிறுமியும் காதலித்து வந்துள்ளனர். இரு வீட்டாருக்கும் இடையில் நீண்ட காலமாகக் குடும்பப் பகை நிலவி வந்துள்ளது.

இந்நிலையில், தமது பிள்ளைகள் காதலிப்பதை அறிந்த பெற்றோர் காதலுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனால் காதலர்கள்

☞2

## வரணியில் 17 பேருக்கு கொரோனா

யாழ்., தென்மராட்சி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நடத்தப்பட்ட எழுமாற்று அன்டிஜன் பரிசோதனையில் 25 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட வரணியில் சமுர்த்தி வங்கி ஊழியர் ஒருவர், பனை அபிவிருத்திச் சபை ஊழியர்கள் உட்பட்ட 17 பேருக்கு வரணிப் பகுதியில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், சாவகச்சேரிப் பகுதியில் எண்மருக்குத்

☞2

## வடக்கு பிரதம .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிசெய்யப்பட்ட அதேநேரம் வடக்கு மாகாண சபையின் மேலும் சில மூத்த அதிகாரிகளுக்கு தொற்று இனங்காணப் பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வடக்கு மாகாண சமூக சேவைத் திணைக்கள ஆணையாளரும் வடக்கு மாகாண பதில் காணி ஆணையாளருமான சோதிநாதன் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் ஆயகுலன் ஆகியோருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால் வடக்கு மாகாணத் திணைக்களங்களில் பணியாற்றுபவர்களை கொரோனாப் பரிசோதனைக்கு உட்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

## வல்வெட்டித்துறை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதையடுத்து அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று உயிரிழந்துள்ளார்.

## மறு அறிவித்தல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வங்கியின் பருத்தித்துறை கிளையின் பாதுகாப்பு உத்தியோகத்தருக்குக் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பரிசோதனைக்கு உட்படுத்திய போது அவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது என இன்று முற்பகல் அறிவிக்கப்பட்டது.

அதையடுத்து தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறை கிளையில் பணியாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களையும் 14 நாள்களுக்கு சுயதனிமைப்படுத்த வைத்திய சுகாதார மருத்துவ அதிகாரியால் அறிவுறுத்தப்பட்டது.

## தனிமைப்படுத்தல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஏனையோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

## குடும்பப் பகை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் தவறான முடிவெடுத்து உயிர்மாய்க்க முனைந்துள்ளனர்.

அந்நிலையில், இருவரையும் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்தவேளை, அங்கு காதலன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். காதலி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## 131 கிலோ கேரள ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்திவரப்பட்ட கேரள கஞ்சாவைக் கூலர் வாகனத்தில் நூதனமாக மறைத்து வைத்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்வதாகக் கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்றுக் காலை இந்த வாகனம் மடக்கப்பட்டது.

இதன்போது மீன் எடுத்துச் செல்லப் பயன்படுத்தப்படும் ரெஜிபோம் பெட்டிகளில் மறைத்துக் கடத்த முற்பட்ட 131 கிலோகிராம் கேரள கஞ்சாவையும் அதனைக் கடத்த உடந்தையாக இருந்த இருவரையும் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

## வரணியில் ................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சிற்றுண்டிச் சாலையின் ஊழியரும் ஒருவர்.

குறித்த சிற்றுண்டிச்சாலைக்கு நகரின் பெருமளவான வர்த்தகர்களும் மக்களும் செல்பவர்கள் என்பதால், அங்கு சென்று வருபவர்களை அவதானமாகச் செயற்படுமாறு சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர். அத்துடன் சிற்றுண்டிச்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

## தவறை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் சொல்வதையும், வழங்கும் ஆலோசனைகளையும் ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்வதில்லை. நாடு இன்று பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்நிலைமை குறித்து ஏற்கனவே அறிவித்துள்ளோம். உரிய இடத்துக்குப் பொருத்தமான நபர் சேவையில் அமர்த்தப்படாமை தற்போதைய நெருக்கடிகளுக்கு ஒரு காரணியாகும்.

கொரோனா வைரஸ் தொடர்பில் முறையான கொள்கைத் திட்டம் செயற்படுத்தப்படவில்லை. எல்லை மீறிய அதிகாரங்கள் பலவீனமான ஆட்சி அதிகாரத்தை உருவாக்கும் என்று குறிப்பிடப்படுவது இன்று உண்மையாகியுள்ளது. இந்த அரசுக்கு நாட்டு மக்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பல எதிர்பார்ப்புக்கு மத்தியில் வழங்கினார்கள்.

பலமான தலைமைத்துவத்தின் கீழ் நாடு நல்லதை நோக்கிப் பயணிக்கும் எனக் கருதியே மக்கள் பெரும்பான்மைப் பலத்தை வழங்கினார்கள். ஆனால், இன்று மக்களின் எதிர்பார்ப்பு தகர்த்தப்பட்டு மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அதிகாரம் கூடிய பின்னர் தான்தோன்றித்தனம் ஏற்படும் என்பதைத் தற்போது உணர்ந்துகொள்கின்றோம் - என்றார்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு**
**தொலைபேசி இலக்கம்-**
**076 443 8622**
**மின்னஞ்சல் -**
**kalaikkathiradvt@gmail.com**

**வேலைவாய்ப்பு**
சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு -
076 740 3814

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## கண்ணீர் அஞ்சலி



சமூக சேவையாளரும் இடதுசாரி சிந்தனையாளருமான வல்வெட்டித்துறை நகர சபையின் நகர பிதா கோணலிங்கம் கருணானந்தராசாவின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

அவரது குடும்பத்தாரின் கவலையில் நாம் பங்கேற்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள்**
**பருத்தித்துறை பிரதேச சபை.**



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசியலில் இராணுவம்

நாடு பலமுனைகளில் ஆபத்தான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

கொரோனாத் தொற்று எல்லை மீறியுள்ளது. வீட்டுக்கு வீடு சாவு விரைவில் என்பது உறுதியாகி வருகின்றது.

பாரத்தைக் கடவுளிடம் ஒப்படைக்கும் நிலைமைக்கு அரசே வந்திருப்பதுதான் துரதிஷ்டம்.

"நாட்டை முடக்குவது என்ற தீர்மானம் கடைசி தெரிவே. எனவே மக்கள் கட்டாயமாகத் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும். அதற்கு அப்பால் பொறுப்பை கடவுளிடம் ஒப்படைத்துள்ளோம்" – என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல மற்றும் இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

ஆக, மக்களின் உயிர்ப் பாதுகாப்பை கடவுளிடம் ஒப்படைக்கும் நிலைமைக்கு அரசே வந்துவிட்டது என்றால் மக்கள் கைவிடப்பட்ட நிலைமைதான்.

சுகாதார – மருத்துவ நிலைமையும் அதையொட்டிய உயிர்ப்பாதுகாப்பு அச்சுறுத்தலும் இத்தனை மோசம் என்றால், மறுபுறம் நாட்டின் பொருளாதாரம் மிக மிக ஆபத்தான கட்டத்தில்.

அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடு நேரடியாக மக்களை வாட்டத் தொடங்கிவிட்டது மஞ்சளில் தொடங்கிய தட்டுப்பாடு இப்போதும் பால் மா வரை வந்துவிட்டது. வீடுகளுக்கு கொண்டு வந்து விநியோகிக்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களுக்காக, இப்போது வெற்றுச் சிலிண்டர்களுடன் மக்கள் வரிசையில் காத்திருந்து அல்லாடும் நிலைமை.

விரைவில் எரிபொருள் தட்டுப்பாடும் வருவது உறுதி என்கின்றன உள்வீட்டு வட்டாரங்கள். அப்படி நேர்ந்தால் அனைத்து அத்தியாவசிய சேவைகளும் முடங்கிவிடும்.

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு நாட்டை அரசு முடக்குகின்றதோ இல்லையோ, பொருளாதார நெருக்கடியால் நாடும் அரசும் முடங்குவது தவிர்க்க முடியாததாகலாம்.

கொரோனாத் தொற்று நெருக்கடி, பொருளாதாரச் சிக்கல் ஆகியவை ஒருபுறம் என்றால், நாட்டின் நிர்வாகத்துக்குள் – அரசியலுக்குள் நேரடியாக இராணுவம் தலையீடு செய்யும் சூழ்நிலை தோன்றியிருக்கின்றமை மிகப் பலவீனமான நிலையை நோக்கி அரசுக் கட்டமைப்பு சென்று கொண்டிருப்பதற்கு அடையாளமாகின்றது.

இராணுவத் தளபதி பதவியில் இருப்பவர் நாட்டின் சரித்திரத்தில் முதல் தடவையாக நேரடியாக அரசியல் சர்ச்சைக்குள் கருத்து வெளியிட்டு சம்பந்தப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இது நல்லதல்ல என்று சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

கொவிட் கட்டுப்பாடு தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டல்களுக்கு அமைய இலங்கையிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துக்கு அரசியல்வாதி மாதிரி பதிலடி கொடுக்க முற்பட்டிருக்கின்றார் இராணுவத் தளபதி.

இராணுவத் தளபதியான சவேந்திர சில்வா, நாட்டின் கொரோனாக் கட்டுப்பாட்டு செயலணியின் தலைவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டு இருக்கலாம் ஆனால் இந்தக் கணம் வரை அவர் நாட்டின் இராணுவத் தளபதிதான். அதை அவர் மறந்து, புறம்தள்ளி நடக்க முடியாது. நடக்கக் கூடாது. வேறு புதிய புதிய பதவிகளை மேலதிகமாக அவர் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் இராணுவத் தளபதியாக இருக்கும் வரை அவர் அரசியல் சார்ந்த பேச்சுக்கள், செயற்பாடுகளில் நேரடியாகச் சம்பந்தப்படக்கூடாது; ஈடுபடவும் கூடாது – வேறு எந்தப் பதவியை மேலதிகமாக வகித்தாலும் கூட.

ஆனால் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கூறுகின்றமை போல, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்கு இராணுவத் தளபதி சிறுபிள்ளைத்தனமாக அரசியல் பிரதிபலிப்புகளைக் காட்டியிருக்கின்றமை பொருத்தமற்றது. இராணுவத் தளபதி என்ற பதவி நிலைக்குப் பொறுப்பான செயல்பாடு இதுவல்ல.

எதிர்காலத்தில் இராணுவத் தளபதி பதவியில் இருக்கக்கூடியவர்கள் பதவியில் இருந்தபடியே நேரடியாக அரசியல் செய்யும் ஆபத்தான கட்டம் நேரலாம். அதற்குக் கட்டியம் கூறும் – வெற்றிலை வைக்கும் – பாங்காகவே இராணுவத் தளபதியின் தற்போதைய கருத்து வெளிப்பாடு அமைந்திருக்கின்றது.

ஜனநாயகக் கட்டமைப்பின் தலைவர் என்ற முறையில் – முன்னாள் பிரதமர் என்ற ரீதியில் – தற்போதைய சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் – கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் சரியான வழிகாட்டுதல்களுக்கான பரிந்துரைகளை செய்ய வேண்டிய கடப்பாடும் பொறுப்பும் ரணில் விக்கிரமசிங்க போன்ற தலைவருக்கு உண்டு.

அது தொடர்பில் அரசியல்வாதிகள் போல இராணுவத் தளபதி செயற்பட்டு, பகிரங்கக் கருத்து வெளிப்பாடுகளில் ஈடுபட்டமை இலங்கை அரசியலின் ஆபத்தான செல்நெறிக்கு ஒரு மோசமான உதாரணமாகும்.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள்; நௌபர் மௌலவி உள்ளிட்ட 25 பேருக்கு எதிராக வழக்கு!

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களின் பிரதான சம்பவங்கள் தொடர்பில் 25 பேருக்கு எதிராக சட்ட மா அதிபர் திணைக்களம் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள இந்த குற்றப் பத்திரிகையில், நௌபர் மௌலவி, சாஜித் மௌலவி, மொஹம்மட் மில்ஹான், சாதிக் அப்துல்லாஹ், கபூர் மாமா எனும் ஆதம் லெப்பை, மொஹம்மட் சம் சுதீன், மொஹம்மட் ரிஸ்வான் உள்ளிட்ட பிரதிவாதிகள் அடங்குகின்றனர் என அறிய முடிகின்றது.

23 ஆயிரத்து 270 குற்றச்சாட்டுக்களின் கீழ் பயங்கரவாத தடைச் சட்டத்தின் விதி விதானங்களின் பிரகாரம் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அதனை விசாரிக்க சிறப்பு ட்ரயல் அட்பார் நீதிமன்றை அமைக்குமாறு சட்டமாஅதிபர்பிரதமநீதியரசரிடம் கோரியுள்ளார்.

கொழும்பு மற்றும் நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கடந்த 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி 8 தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் பதிவாகின.

கரையோர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்பு, கட்டான பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கட்டுவாப்பிட்டி புனித செபஸ்டியன் தேவாலயம், மட்டக்களப்பு புனித சீயோன் தேவாலயம் ஆகிய கிறிஸ்தவ தேவாலயங்களும் கொழும்பு காலி முகத்திடலுக்கு சமீபமாகவுள்ள ஷங்கிரில்லா, சினமன் கிராண்ட், கிங்ஸ்பெரி ஆகிய ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இந்த தற்கொலை குண்டுத் தாக்குதல்களால், 30 வெளிநாட்டவர்கள் உட்பட 268 பேர் கொல்லப்பட்டமையுடன், 27 வெளிநாட்டவர்கள் உட்பட 594 பேர் காயமடைந்தனர்.

இந் நிலையிலேயே இந்த பிரதான 8 குண்டுவெடிப்புகள் தொடர்பிலும் பிரதிவாதிகள் 25 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்டத்தில் பைஸர் 2 ஆவது டோஸ் செலுத்தல்



மன்னார் மாவட்டத்தில் நேற்று (செவ்வாய்க் கிழமை) காலை தொடக்கம் 'பைஸர்' கொவிட் தடுப்பூசியின் 2 ஆவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் உள்ள கரையோர பிரதேசங்களில் உள்ள அபாயம் கூடிய கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமை வழங்கப்பட்டு குறித்த கிராமங்களைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதலாவது 'பைஸர்' கொவிட் தடுப்பூசி கடந்த மாதம் 10 ஆம் திகதி முதல் வழங்கப்படுகிறது. இந்த நிலையில் பைஸர் தடுப்பூசியின் 2 ஆவது தடுப்பூசி வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் நேற்று முதல் மாவட்டத்தில் குறிப்பிட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஊடாக வழங்கப்பட்டு வருகிறது.

நேற்று காலை முதல் தலைமன்னாரில் இருந்து குறித்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஊடாக கொவிட் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# காதலனால் கொலை செய்யப்பட்ட யாழ். யுவதி மற்றும் அவரது குழந்தையின் எச்சங்கள் மீட்பு



காதலனால் கொலை செய்யப்பட்ட யாழ். யுவதி மற்றும் அவரது குழந்தையினது என கூறப்படும் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் 6 வருடங்களின் பின் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்த எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யுவதியான தனது காதலியையும், குழந்தையையும் காதலன் கொலை செய்து எரித்த இடத்தில் தடவியல் பொலிஸாரின் உதவியுடன் தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையிலேயே இவை மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில், வவுனியாவைச் சேர்ந்த சந்தேகநபர், யாழ்ப்பாணம் - கோண்டாவில் பகுதியில் 2015ஆம் ஆண்டு ஒப்பந்த வேலை ஒன்றுக்கு சென்றுள்ளார்.

இதன்போது அப்பகுதியில் உள்ள 19 வயது யுவதியுடன் திருமணத்துக்கு முன் உறவு கொண்ட நிலையில் அந்தப் பெண் கர்ப்பமாகியுள்ளார்.

யுவதிக்கு பிரசவமான பின் திருமணம் செய்கிறேன் எனக் கூறி வவுனியா - மருதன்குளம் பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்கு கடந்த 2015 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 9 ஆம் திகதி அழைத்து சென்றுள்ளார்.

அங்கு காதலியுடன் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து குழந்தையை கழுத்தை நெரித்து கொன்ற பின் காதலியையும் கொலை செய்து, உடல்களை தென்னை மட்டை, மண்ணெண்ணெய், சீனியை பயன்படுத்தி எரித்துள்ளார். எஞ்சிய பாகங்களை தோட்டத்தில் புதைத்துள்ளார் எனத் தெரியவருகிறது. இந்த நிலையில் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில் 6 வருடங்களுக்கு பின் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் யாழ்ப்பாணம் - கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய பரமேஸ்வரன் சஜிந்திகா மற்றும் அவரது ஆறு மாதக் குழந்தை ஆகியோரே கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய ஆஸ்பத்திரியில் ஒட்சிசன் விநியோகத்தில் தடை;

# கொரோனா நோயாளிகள் 11 பேர் சாவு



ரஷ்யாவின் தன்னாட்சி பெற்ற பிராந்தியமான வடக்கு ஒசேஷியா அலனியாவின் தலைநகர் விளாடி காவ்காசில் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் ஆஸ்பத்திரி ஒன்று உள்ளது. இந்த ஆஸ்பத்திரியின் அவசர சிகிச்சை பிரிவில் 70இற்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெற்று வந்தனர். அவர்களில் பலருக்கு செயற்கை சுவாச கருவி மூலம் ஒட்சிசன் வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் இந்த ஆஸ்பத்திரிக்கு ஒட்சிசன் விநியோகம் செய்ய பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள ஒட்சிசன் குழாயில் நேற்று முன்தினம் மாலை திடீரென வெடிப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக நோயாளிகளுக்கான ஒட்சிசன் விநியோகம் தடைப்பட்டது. இதனால் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா நோயாளிகள் 11 பேர் மூச்சுத் திணறல் ஏற்பட்டு பரிதாபமாக இறந்தனர்.

இதனை தொடர்ந்து ஆஸ்பத்திரி ஊழியர்கள் விரைவாக செயல்பட்டு ஒட்சிசன் சிலிண்டர்களை கொண்டு வந்து நோயாளிகளுக்கு ஒட்சிசன் வழங்க தொடங்கினர். இதன் மூலம் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த பல நோயாளிகள் காப்பாற்றப்பட்டனர்.

இதனிடையே ரஷ்யாவின் மத்திய சுகாதார கண்காணிப்பகம் இந்த சம்பவம் குறித்து விசாரணையை தொடங்கி உள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இந்தியாவில் இருந்து அபுதாபிக்கு வருபவர்களுக்கு 12 நாள்கள் தனிமைப்படுத்துதல் கட்டாயமாகும்

### எதிகாத் விமான நிறுவனம் தகவல்

அபுதாபி அவசரம், நெருக்கடி மற்றும் பேரிடர் மேலாண்மை கமிட்டி வெளியிட்டுள்ள தனிமைப்படுத்துதலுக்கான விதிமுறைகள் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அதன்படி பசுமை நாடுகளின் பட்டியலில் இடம்பெறாத இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து அபுதாபிக்கு வருகை தரும் பயணிகளுக்கு புதிய விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் அங்கிருந்து வரும் விமான பயணிகள் கட்டாயம் அமீரகத்தில் 2 டோஸ் கொரோனாத் தடுப்பூசி போட்டுக்கொண்டு இருக்க வேண்டும். அந்த தடுப்பூசி போட்டுக்கொண்டு குறைந்தது 14 நாள்கள் நிறைவடைந்திருக்க வேண்டும்.

இந்தியாவில் இருந்து அபுதாபிக்கு விமான பயணிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை கட்டாயம் செய்யப்படுகிறது.



இதில் விமான நிலையத்தில் குடியேற்ற பிரிவு சோதனை நிறைவு பெற்றதும் அவர்களுக்கு மருத்துவத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட கைப்பட்டைகள் அணிவிக்கப்படுகிறன்றன. அதன் பிறகு தங்களை அவர்கள் 12 நாள்கள் கட்டாயத் தனிமைப்படுத்துதலுக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

அந்த நேரத்தில் 6 ஆவது நாளில் ஒரு பி.சி.ஆர்.பரிசோதனையும், பிறகு 11வது நாளில் பி.சி.ஆர். பரிசோதனையும் எடுத்துக் கொள்வது கட்டாயமாகும். மேலும் டுபாயில் குடியிருப்பு விசா பெற்றவர்கள் அபுதாபிக்கு வர தடையில்லை. முன்னதாக அந்தந்த பகுதிகளில் விசா பெற்றவர்கள் மட்டுமே குறிப்பிட்ட

இதில், பசுமை நாடுகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ள பகுதிகளில் இருந்து அபுதாபிக்கு வருகை புரியும் பயணிகள் அபுதாபி விமான நிலையத்திற்கு வந்ததும் கட்டாயம் பி.சி.ஆர். பரிசோதனை

...ங்களுக்கு வருகை புரிய ...ப்பட்டு இருந்தநிலையில், விமானப் போக்குவரத்து வழிகாட்டுதல்படி இதில் ...ப்பட்டுள்ளது.

## கொரோனா பாதித்த கர்ப்பிணிகளுக்கு குறை பிரசவத்துக்கு அதிக வாய்ப்பு

### ஆய்வில் கண்டுபிடிப்பு



கொரோனாத் தொற்று ஏற்பட அதிக வாய்ப்புள்ள பிரிவினராக கர்ப்பிணிகள் கருதப்படுகின்றனர். அப்படி தொற்றுக்கு ஆளாகும் கர்ப்பிணிகளுக்கு வைரஸால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.

இதில் அதிர்ச்சிகரமான முடிவுகள் கண்டறியப்பட்டு உள்ளன. அந்தவகையில் கர்ப்ப காலத்தின் ஒரு கட்டத்தில் தொற்றுக்கு ஆளாகும் கர்ப்பிணிகளுக்கு முன்கூட்டிய பிறப்பு அல்லது குறை பிரசவத்துக்கு அதிக வாய்ப்பு இருப்பது தெரியவந்துள்ளது.

அந்தவகையில், கருவுற்றதில் இருந்து 32 வாரங்களுக்குள் பிரசவம் ஏற்படும் ஆபத்து 60 சதவீதம் அதிகமாக இருந்தது. இதைப்போல குறை பிரசவ அல்லது 37 வாரங்களுக்குள் குழந்தை பிறக்கும் ஆபத்து 40 சதவீதம் அதிகமாக இருந்தது,

அதுவும் உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு அல்லது உடல் பருமன் போன்ற பிரச்சினைகள் உள்ள கர்ப்பிணிகளுக்கு குறை பிரசவ ஆபத்து 160 சதவீதமாக இருந்ததும் தெரியவந்துள்ளது. எனவே தடுப்பூசி போடுதல் உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகள் மூலம் கர்ப்பிணிகளை பாதுகாக்க வேண்டும் என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

## இந்தியா-மியான்மர் எல்லையில் ஆயுத குவியல் சிக்கியது

மணிப்பூர் மாநிலம் டெக்னோபால் மாவட்டத்தில் இந்தியா-மியன்மார் சர்வதேச எல்லை அமைந்துள்ளது. இந்த பகுதியில் மணிப்பூர் பொலிஸார் மற்றும் அசாம் ரைபிள் கூட்டுப்படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். அப்போது மோரே என்ற நகரத்தில் ஒரு வீட்டில் ஏராளமான ஆயுதங்கள், வெடிமருந்து பொருள்கள் மற்றும் கருவிகள் குவியலாக கைப்பற்றப்பட்டன.

2 ஏ.கே.47 துப்பாக்கிகள், 2 எம்.16 ரக துப்பாக்கிகள், 9 எம்.எம். கைத்துப்பாக்கிகள் 3, சீன கையெறிகுண்டு, தோட்டா தயாரிப்பு பொருள்கள், ஆகியவை கைப்பற்றப்பட்டன. அந்த வீட்டில் யாரும் இல்லாததால் பொலிஸார் யாரையும் கைது செய்யவில்லை. கைப்பற்றப்பட்ட ஆயுதக்குவியல், அந்த பகுதி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

INDIVIDUAL ENGLISH CLASSES

K. GANESH (BA. Pera)

அடிப்படையில் இருந்து
ஆங்கிலம் பேச விரும்புவோர்
Grammar - Spoken
English Medium
செய்பவர்கள்
Grade - from 7 to 11 வரை
பட்டதாரிகள்,
தொழில் புரிபவர்கள்



077 766 8725

நீராவியடி, யாழ்ப்பாணம்

## ...ங்கரம்; 25 இராணுவ வீரர்கள் உள்பட 42 பேர் பலி



கி.மீ. (62 மைல்) தொலைவில் உள்ள டிஸி ஓசோ மாகாணத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் ஆறு பொது மக்கள் கொல்லப்பட்டனர் என அரசாங்கம் முன்பு தெரிவித்திருந்தது.

இதுதொடர்பாக நேற்று இரவு அரசு தொலைக்காட்சியில் பேசிய அந்நாட்டு பிரதமர் அய்மான் பெனாப்டெர்ரஹ்மானே, இராணுவத்தின் 25 வீரர்கள் உட்பட பலி எண்ணிக்கை 42 ஆக உயர்ந்துள்ளது.

விமானங்களை வாடகைக்கு எடுப்பதற்கும், தீயை அணைக்கும் செயல்முறையை விரைவு படுத்துவதற்கு,வெளிநாட்டுகளுடன் அரசாங்கம் மேம்பட்ட பேச்சில் ஈடுபட்டுள்ளது. தீயணைப்பு வீரர்கள் மற்றும் இராணுவம் இன்னும் தீயை அணைக்க முயன்று வருகின்றன. அதிகமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





## இந்திய நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் நிறைவடைய முன்னதாகவே மக்களவை ஒத்திவைப்பு

இந்திய நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் நிறைவடைய இரண்டு நாள்களுக்கு முன்பாகவே மக்களவை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜூலை 19 ஆம்திகதி இந்தியநாடாளுமன்றின் மழைக் காலக் கூட்டத்தொடர் தொடங்கியது முதலே பெகாசஸ் விவகாரம், வேளாண் சட்டங்கள் உள்ளிட்டவற்றை முன்வைத்து எதிர்க்கட்சிகள் தொடர் அமளியில் ஈடுபட்டுவந்தன. பெகாசஸ் ஒட்டுக்கேட்பு விவகாரம் பற்றி விவாதிக்க வேண்டும் என எதிர்க்கட்சி எம்.பிக்கள் வலியுறுத்திய நிலையில் அது நாடாளுமன்றத்தில் விவாதிக்க கூடிய விடயமல்ல எனக் கூறி அரசு மறுப்பு தெரிவித்துவந்தது. இதனால், மழைக்கால கூட்டத்தொடரே முடங்கிப் போனது.

அவை கூடுவதும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டு ஒத்திவைக்கப்படுவதும்வாடிக்கையாக இருந்து.

இந்த அமளிக்கு மத்தியில் பல்வேறு பிரேரணைகளை அரசு நிறைவேற்றிக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது. முக்கியமாக, இதர பிற்படுத்தப்பட்டோர் பட்டியலை முடிவு செய்யும் அதிகாரத்தை மீண்டும் மாநிலங்களுக்கே அளிக்கும் பிரேரணை மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. இந்த பிரேரணை மட்டும் எதிர்க்கட்சிகளின் முழு பங்களிப்புடன் நிறைவேறியது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் 13 ஆம் திகதியுடன் நிறைவு பெற வேண்டிய நிலையில் தொடரும் அமளியால் முன்னதாகவே திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## வேளாங்கண்ணி ஆண்டு விழா பக்தர்கள் பங்கேற்கத் தடை

பிரசித்திபெற்றவேளாங்கண்ணி பேராலயத்தின் ஆண்டு திருவிழா வருகிற 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. செப்டெம்பர் 8 ஆம் தேதி வரை விழா நடைபெறும் நிலையில், கொரோ



னாப் பரவலைக் கவனத்தில் கொண்டு பக்தர்களுக்குத் தடை விதித்து மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், 10 நாள்களும் வேளாங்கண்ணியில் தங்கும் விடுதிகளை மூடவும் உத்தரவிடப் பட்டுள்ளது. திருவிழாவை முன்னிட்டு தற்காலிகக் கடைகள் அமைப்பதற்கும், பிற கடைகள் மற்றும் உணவகங்கள் திறப்பதற்கும் இம்முறை அனுமதி வழங்கப்படவில்லை என மாவட்ட ஆட்சியர் அருண் தம்புராஜ் அறிவித்துள்ளார்.



## பஞ்சாப்பில் பாடசாலை மாணவர்கள் 20 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

இந்தியா முழுவதும் கடந்த ஆண்டு கொரோனா பரவலை முன்னிட்டுஊரடங்குகட்டுப்பாடுகள் அமுலாகின. இதனை முன்னிட்டு பாடசாலைகள், கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிலையங்கள் மூடப்பட்டன. பல மாநிலங்களில் தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டு பின்ரத்துச் செய்யப்பட்டன.

இதையடுத்து கொரோனா 2 ஆவது அலையின் தீவிரம் குறைந்துள்ள நிலையில், மாநிலங்களில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. கொரோனாப் பரவல் குறைந்ததையடுத்து சில மாநிலங்களில் பாடசாலைகள் திறக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், பஞ்சாப்பில் ஊரடங்குத் தளர்வு அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 2 ஆம் திகதி முதல் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டன. பாடசாலைகள் திறக்கப்பட்டதையொட்டி கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை கடைப்பிடித்துமாணவமாணவியர் பள்ளிகளுக்கு ஆர்வமுடன் வருகை புரிந்தனர்.

இந்நிலையில், பஞ்சாப்பில் பாடசாலைகள் திறக்கப்பட்ட இரண்டாவது வாரத்தில், லுதியானாவில் உள்ள 2 அரசுப் பாடசாலைகளில் 20மாணவர்களுக்குகொரோனாத் தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. தொற்று உறுதிசெய்யப்பட்ட அந்த 2 பாடசாலைகள் 14 நாள்களுக்கு மூடப்பட்டுள்ளன. மற்றபாடசாலைகள்வழக்கம்போல் செயல்படுகின்றன.

தொற்று உறுதி செய்யப்பட்ட அனைத்து மாணவர்களும் அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களின் உடல்நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்களிடையே தொற்று பரவுவதை கண்காணிப்பதற்காக மாநில சுகாதாரத்துறை, மாநிலம் முழுவதும் உள்ள பாடசாலைகளில் தினமும் பத்தாயிரம் பரிசோதனைகளை நடத்தி வருகின்றன எனத் தெரிவித்துள்ளது.

## தடுப்பூசிகளில் வெளிப்படைத்தன்மை கோரி வழக்கு இந்திய மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்



தடுப்பூசிகளுக்கான தேசியநிபுணர்குழுவின் முன்னாள் உறுப்பினரான ஜேக்கப் தாக்கல் செய்திருந்த மனுவில், இந்தியாவில் அரசு ஊழியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கட்டாயமாக தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டுமென நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்திருந்தார்.

ஆயினும், அவசர காலத்தில் தடுப்பூசியை பயன்படுத்த அனுமதிப்பது தொடர்பாகவும் தடுப்பூசிகளின் பரிசோதனைகள் குறித்த முழுமையான விவரங்களையும் மத்திய அரசு வெளிப்படைத்தன்மையுடன் வெளியிடவில்லை என்றும், இது ஒவ்வொரு இந்திய குடிமகனின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் வகையில் இருப்பதாகவும் மனுவில் தெரிவித்திருந்தார்.

இந்த மனு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் பிரசாந்த் பூன், "உலகின் பல நாடுகள் அஸ்ட்ராஜெனெகா மருந்தைப் பயன்படுத்த தடை விதித்திருக்கின்றன. ஆனால், இந்த நிறுவனம்தான் இந்தியாவில் கொவிஷீல்ட் மருந்துகளைத் தயாரித்து வருகிறது. பொதுமக்களிடம் தடுப்பூசிகள் குறித்த ஐயங்கள் உள்ள நிலையில், மத்திய அரசு உரிய வகையில் இதனைத் தெளிவுபடுத்த உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.


தடுப்பூசி செலுத்திக் கொள்வதில் சில பிரச்சினைகள் இருக்கக்கூடிய இச்சூழலில் இந்த விவகாரத்தை கவனமாககையாளவேண்டும் என்று கூறிய நீதிபதிகள், மனுதாரர் எழுப்பியிருக்கக்கூடிய சந்தேகங்கள் தொடர்பாக இந்திய மத்திய அரசு பதில் அளிக்க நோட்டீஸ் அனுப்புவதாகவும் நான்கு வார காலத்திற்கு பிறகு இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாகவும் கூறியுள்ளனர்.

## ஒலிம்பிக்கில் பதக்கங்களை வென்ற இந்தியர்களுக்கு கடலுக்கடியில் வித்தியாசமான முறையில் வாழ்த்து

ஒலிம்பிக் போட்டிகளில் 7 பதக்கங்களை வென்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்த வீரர்களைபாராட்டும்வகையில்புதுச்சேரியை சேர்ந்த ஆழ்கடல் நீச்சல் பயிற்சியாளர்கள் 7 பேர் கடலுக்கு அடியில் இந்தியத் தேசியக் கொடியுடன் தங்களின் வாழ்த்துகளை வித்தியாசமான முறையில் தெரிவித்துள்ளனர்.

நடந்து முடிந்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் இந்திய வீரர்கள் 7 பதக்கங்களை வென்று நாடு திரும்பி உள்ளனர். ஈட்டி எறிதலில் தங்கமும், குத்துச்சண்டையில் வெள்ளியும், பளு தூக்குதல், இறகுப்பந்து, ஹொக்கி உட்பட மொத்தம் 7 பதக்கங்களை இந்தியா வென்றுள்ளது. இவர்களுக்கு இந்தியா முழுவதும் இருந்து பாராட்டுகள் குவிந்து வருகின்றன. இந்தநிலையில், புதுச்சேரியைச் சேர்ந்த ஆழ்கடல் நீச்சல் வீரர் அரவிந்த் என்பவரது குழுவினர், கடலுக்கு அடியில் 12 மீற்றர் ஆழத்தில் வித்தியாசமான முறையில் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர். பதக்கம் வென்ற 7 பேரை பாராட்டும் வகையில் ஏழு நீச்சல் வீரர்கள் கடலின் 12 மீற்றர் ஆழத்துக்குச் சென்று ஹொக்கி மட்டை, இறகுப்பந்து மட்டை, குத்துச்சண்டை, ஈட்டி எறிதல், பளு தூக்குவதுபோல் கடலுக்கடியில் நின்று இந்திய தேசியக் கொடியோடு பதக்கம் வென்ற வீரர்களுக்கு தங்களது வாழ்த்துகளை வித்தியாசமான முறையில் பகிர்ந்துள்ளனர்.





# சேதனப்பசளை தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்ட அலுவலர்களுக்கு கொரோனா

கிழக்கு மாகாண விவசாயத்திணைக் களம் சத்துருக்கொண்டானில் நடாத்திய விவசாய சேதனப்பசளை தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்ட அரச அலுவலர்களில் பலருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கருத்தரங்கில் கலந்துகொண்டபலர் அவரவர் வீடுகளில் தற்சமயம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மட்டு.பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கிருபைராஜா கிரிசுதன்கருத்துகூறுகையில்கருத்தரங்கில் கலந்துகொண்டோரில் எனது பிரிவுக்குள் 21 அரசகள உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கான சிகிச்சை ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கருத்தரங்கில் ஆரையம்பதியைச்சேர்ந்த விவசாயத்திணைக்கள உதவிப்பணிப்பாளரொருவரும் நேற்றைய தினம் கொரோனாத் தொற்றுக்கிலக்கானது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த கள அலுவலர் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து ஏனையோர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதில் எனது பகுதியில் அறுவர் இனங்காணப்பட்டுள்ளனர். ஏனைய பகுதிகளில் எத்தனைபேர் தொற்றுக்கிலக்காகியுள்ளனர் என்பது பற்றி எனக்குத் தெரியாது என்றார்.

குறித்த கருத்தரங்கில் கலந்து கொண்டவருக்கு காய்ச்சல், தலையிடி, சளிபிரச்சினை காட்டியதால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என அறிவிக்கப்படுகிறது. மொத்தமாக 60 பேரளவில் தொற்றுக்கிலக்காகியிருக்கலாமெனக் கூறப்பட்டபோதிலும் அது நம்பகமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட விவசாய நீர்ப்பாசன கள அலுவலர்களுக்கான ஐந்துநாள் திரிசாற குருஷிசங் குருத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்ட கருத்தரங்கு கடந்த 2 ஆம் திகதி திங்கள் முதல் 6 ஆம் திகதி வெள்ளிவரை நடைபெற்றது.

விவசாயத்திணைக்கள விவசாய போதனாசிரியர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நீர்ப்பாசனத்திணைக்கள களஅலுவலர்கள் கமநலஅபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என 170 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த கருத்தரங்கு சத்துருக்கொண்டான் சர்வோதய கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது. கலந்துகொள்ள அழைக்கப்பட்ட 170 களஅலுவலர்களும் இரண்டாகப்பிரிக்கப்பட்டு இரு வேறு மண்டபங்களில் நடாத்தப்பட்டன.

அதில் ஒரு மண்டபம் குளிரூட்டப்பட்டது. ஒருமண்டபத்திற்கு விவசாய பிரதிப் பணிப்பாளர் வி.பேரின்பராஜாவும் மறு மண்டபத்திற்கு விவசாய அபிவிருத்தி திணைக்கள் உதவிஆணையாளர் கே.ஜெகந்நாத்தும் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

முதல்நாள் நிகழ்வை கிழக்குமாகாண விவசாயஅமைச்சின் செயலாளர் திருமதி கலாமதிபத்மராஜா கலந்துகொண்டு ஆரம்பித்திருந்தார்.

நிறைவுநாளன்று கிழக்குமாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் கலந்து கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## வாய்க்கால் வரப்புகளில் கூடுபவர்களுக்கு அதிரடியாக அன்டிஜன் பரிசோதனைகள்

அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்டகிராமங்களில் வாய்க்கால் கரையோரங்கள், வயல்வெளிகளில் குடும்ப சகிதம் கூடுவதன் மூலம் சுகாதார விதிமுறையை மீறி நடந்து கொள்பவர்களுக்கு அதிரடி நடவடிக்கையாக அன்டிஜன் பரிசோதனை செய்யப்பட்டு வருவதோடு சட்ட நடிவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனாத் தொற்றினால் அதிகமானவர்கள் மரணித்துக்கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் நாமே நம்மை பாதுகாக்கத் தவறினால் நமது வீடுகளில் இருக்கும் முதியோர்கள் குழந்தைகளின் சுகாதார நிலை பாதிப்புக்குள்ளாகும்.

களியாட்ட நிகழ்வுகள், விருந்தோம்பல், ஒன்றுகூடல்களில் இருந்து தவிர்த்துக் கொண்டு சுகாதார வழிமுறையைப் பின்பற்றி நடந்து கொள்ளல் அனைவரினதும் தலையாய கடமையாகும்.

மக்களைப் பாதுகாப்பதற்காக இரவு பகலாகக் களத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் சுகாதாரத்துறையினரின் வேண்டுகோளை மதித்து சுகாதார வழிமுறைகளுடன் நடந்து கொள்ளுமாறு அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எப்.எம்.ஏ. காதர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கொரோனாத் தொற்றை பரப்பும் அசமந்தமான செயற்பாடுகள்

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வரும் நிலையில் சிலர் தொற்றுக்களை பரவச் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகிறது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொரோனா ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி – மஜ்மா நகர் பகுதிக்குச் செல்லும் மட்டக்களப்பு – கொழும்பு பிரதான வீதியோரத்தில் பயன்படுத்திய கொரோனாப் பாதுகாப்பு ஆடைகளும், முகக்கவசங்களும் முறையற்ற விதத்தில் வீசப்பட்டுள்ளன.

இதனால் அவ் வீதியைப் பயன்படுத்துவோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் குறித்த பகுதியில் கூடுதலான கால்நடைகள்மேய்ந்துதிரிவதால் ஒருவேளை முகக்கவசங்களிலுள்ள கிருமித் தொற்றுக்கள் கால்நடைகளையும் பாதித்து விடுமோ என்று கால்நடைகள் உரிமையாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு குறித்த இடத்தில் மொத்தமாக முகக்கவசங்களை வீசிச் சென்றுள்ளமை சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி கொரோனா ஆடைகளையும், முகக்கவசங்களையும் அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



## சட்டவிரோதமாக ஆமை இறைச்சி விற்பனை கண்ணகிபுரத்தைச் சேர்ந்த ஒருவர் கைதானார்

சட்டவிரோதமாக ஆமை இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட அக்கரைப்பற்று கண்ணகிபுரத்தைச் சேர்ந்த ஒருவரை நேற்றைய தினம் பொலிஸார் கைது செய்துள்ளமையுடன் அவரிடமிருந்து 16 பால் ஆமைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நபர் அக்கரைப்பற்று வாவியில் இருந்து ஆமைகளைப் பிடித்து தனது மோட்டார் சைக்கிளில் கண்ணகிபுரத்திற்கு எடுத்துச் சென்ற போதே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையின் போது குறித்த நபர் அக்கரைப்பற்று வாவியில் இருந்து ஆமைகளைப் பிடித்து இறைச்சியாக்கி அதனை அம்பாறை நகரிலுள்ள உணவகங்களுக்கு நீண்ட காலமாக விற்பனை செய்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

## ஒரே நாளில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் தொற்றாளர்களாக கல்முனையில் அடையாளம்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பிரிவுகளில் ஒரே நாளில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் தொற்றாளராக நேற்று இனங்காணப்பட்ட நிலையில் ஆலையடி வேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்றும் கொரோனா மரணமொன்று பதிவானதுடன் 17 பேர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டனர் என பிரதேச சுகாதார பதில் வைத்திய அதிகாரி எஸ்.அகிலன் தெரிவித்தார்.

கொரோனா தாக்கம் ஏற்பட்டதன் பின்னர் இதுவரையில் 181 பேர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் 5 மரணங்கள் நிகழ்ந்துள்ளன எனவும் அவர் கூறினார்.

இந்நிலையில் கொரோனா மூன்றாவது அலையின் பின்னரே அதிக தொற்றும் அதிக மரணங்களும் ஏற்பட்டுள்ளன எனவும் இதன்படி 129 தொற்றாளர் அடையாளம் காணப்பட்டதுடன் 4 மரணங்களும் நிகழ்ந்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேநேரம் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் நிலையில் 30 வயதிற்கு மேற்பட்ட 90 வீதத்திற்கும் அதிகமானவர்கள் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டுள்ளனர்.

ஆனாலும் மக்களது பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாகவே தொற்று மிகவும் வேகமாக பரவி வருகின்றது. ஆகவே இக்காலகட்டத்தில் மக்கள் மிகவும் அவதானத்துடனும் பொறுப்புடனும் செயற்படுமாறு சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக்கொண்டார்.

இது இவ்வாறிருக்க ஆலையடிவேம்பில் தொடர்ந்தும் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேநேரம் தடுப்பூசி ஏற்றப்படும் நடவடிக்கையும் சமகாலத்தில் இடம்பெறுகின்றன.

ஆகவே இதுவரையில் தடுப்பூசிகள் ஏற்றிக் கொள்ளாத 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு சென்று தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு


# கண்ணீர் அஞ்சலி



**எமது காலைக்கதிர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர்**
**திரு.என்.வித்தியாதரன் அவர்களின் அன்பு மாமியார்**

## திருமதி கண்மணி நவரத்தினம்

**அவர்கள் இன்று காலமானார்.**

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிப்பதோடு, காலைக்கதிர் குடும்பமும் துயரில் பங்குகொள்கின்றது.

அன்னாரின் ஆத்மா மீண்டும் பிறப்பற்று நித்திய பேரின்பப் பெருவாழ்வு வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

நிர்வாக இயக்குநர், ஊழியர்கள்
காலைக்கதிர் பத்திரிகை.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# மெஸ்ஸியின் புதிய கழகம் பாரிஸ் செய்ன்ட் ஜெர்மைன் நேற்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்

பாரிஸ் செய்ன்ட் ஜெர்மைன் கழகத்துடன் இரண்டு ஆண்டுகளுக்கான ஒப்பந்தத்தில் லியோனல் மெஸ்ஸி கையொப்பமிட்டுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

21 ஆண்டுகளின் பின்னர் பார்ஸிலோனா கால்பந்தாட்டக் கழகத்திலிருந்து வெளியேறிய அவர், நேற்று இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் என பிரான்ஸ் நாட்டின் குறித்த கழகம் நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.

இரு ஆண்டுகளுக்கு மேலதிகமாக ஓர் ஆண்டுக்கான விருப்பத்தெரிவும் இந்த ஒப்பந்தத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்ஸிலோனா கழகத்துக்காக 10 ஆம் இலக்கச் சீருடையுடன் விளையாடிய லியோனல் மெஸ்ஸி, பாரிஸ் செய்ன்ட் ஜெர்மைன் கழகத்திற்காக 30 ஆம் இலக்கச் சீருடையுடன் விளையாடவுள்ளார். இந்த ஒப்பந்தமானது, ஒரு பருவத்திற்கு 3.46 கோடி அமெரிக்க டொலர்கள் என்ற அடிப்படையில், 3 ஆண்டுகளுக்கு 10.4 கோடிடொலர்கள் ஊதியத்துடன் அமைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

# இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு அபராதம்

## தண்டனையாகப் புள்ளிகளும் குறைப்பு




இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் குறித்த ஓவர்களை வீசி முடிப்பதற்கு அதிக நேரம் எடுத்துக்கொண்டதால் இரு அணிகளுக்கும் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) போட்டியின் மூலம் கிடைக்கும் பணத்தில் 40 சதவீதத்தை அபராதமாக விதித்துள்ளது. அத்தோடு ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகளையும் ஐ.சி.சி. குறைத்துள்ளது.

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நொட்டிங்காமில் நடந்தது . இதில் முதல் இன்னிங்ஸில் முறையே இங்கிலாந்து 183 ஓட்டங்களும், இந்தியா 278 ஓட்டங்களும் எடுத்தன. 95 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து 85.5 ஓவர்களில் 303 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன் மூலம் இந்திய அணிக்கு 209 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டன. இந்த இலக்கை நோக்கி தனது 2 ஆவது இன்னிங்ஸை ஆடிய இந்தியா, நான்காவது நாள் ஆட்ட நேர முடிவில் 14 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 52 ஓட்டங்களை எடுத்திருந்தது. ரோகித் மற்றும் புஜாரா இருவரும் தலா 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

ஐந்தாவது நாளில் 157 ஓட்டங்களே வெற்றிக்குத் தேவை என்ற நிலையில், அன்று முழுவதுமே தொடர்ந்து மழை பெய்ததால் போட்டி அந்த நாளுக்கான ஆட்டத்தைக் கைவிடுவதாக அறிவிக்கப்பட்டது. போட்டி எந்த அணிக்கும் வெற்றி, தோல்வியின்றி நிறைவடைந்தது.

இந்தப் போட்டியில் ஒரு புறம் மழை அடிக்கடி குறுக்கிட, குறித்த நேரத்துக்குள் தாங்கள் வீசி முடித்திருக்கவேண்டிய ஓவர்களுக்கு மேலதிக நேரத்தை எடுத்துக் காலத்தை வீணடித்த குற்றச்சாட்டில் இரு அணிகளுமே தண்டனைக்குள்ளாகியுள்ளன.



# விதிமுறையை மீறிய இந்திய ஒலிம்பிக் வீராங்கனைகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

டோக்கியோ ஒலிம்பிக் மல்யுத்த போட்டியில் 53 கிலோ எடைப்பிரிவின் காலிறுதியில் இந்திய வீராங்கனை வினேஷ் போகத் தோல்வி அடைந்து ஏமாற்றமளித்தார். ஹங்கேரியில் பயிற்சியை முடித்து விட்டு அங்கிருந்து நேரடியாக டோக்கியோ சென்றிருந்த அவர், ஒலிம்பிக் கிராமத்தில் இந்திய வீராங்கனைகளுடன் தங்க மறுத்தமையுடன் சக வீராங்கனைகளுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபடவும் மறுப்புத் தெரிவித்திருந்தார்.

போட்டியின்போது இந்திய அணியினருக்குரிய அதிகாரபூர்வ அனுசரணையாளருடைய சின்னம் கொண்ட சீருடையையும் அணிய முடியாது என்று அவர் கூறிவிட்டார். வீராங்கனைகளுக்குரிய நடத்தை விதிமுறையை மதிக்காமல் செயல்பட்ட வினேஷ் போகத்தை இடைநீக்கம் செய்து இந்திய மல்யுத்த சம்மேளனம் நேற்று நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் அவரது செயலுக்கு வருகிற 16 ஆம் திகதிக்குள் பதிலளிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அவரது விளக்கத்துக்குப் பிறகு இறுதி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதுவரை அவர் எந்தவொரு போட்டியிலும் பங்கேற்க முடியாது என்றும் மல்யுத்த சம்மேளனம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் 62 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்ற 19 வயது இந்திய வீராங்கனை சோனம் மாலிக் மல்யுத்த சம்மேளனத்தை மதிக்காமல் செயல்பட்டார் என அவருக்கு விளக்கம் கோரும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவர் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு செல்வதற்கான தனது கடவுச்சீட்டினை இந்திய மல்யுத்த சம்மேளனத்திடம் இருந்து நேரடியாகப் பெறாமல், இந்திய விளையாட்டு ஆணைய அதிகாரிகளை அனுப்பி பெற்றுக்கொண்டமையால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நியூசிலாந்து அணியின் முன்னாள் வீரர் கிறிஸ் கெய்ர்ன்ஸ் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிப்பு



நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரரான கிறிஸ் கெய்ர்ன்ஸ் திடீரென மயங்கி விழுந்த நிலையில் மருத்துவமனையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கிறார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

1989 முதல் 2006 வரையில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி ஓய்வு பெற்றவர் நியூசிலாந்தைச் சேர்ந்த கிறிஸ் கெய்ர்ன்ஸ். இவருக்கு வயது 51. ஆஸ்திரேலியாவில் இருந்த கிறிஸ் கெய்ர்ன்ஸுக்கு சமீபத்தில் இதயத்தில் கோளாறு ஏற்பட்டு மயங்கி விழுந்துள்ளார். ஏற்கனவே இதயத்தில் சில சிகிச்சைகளை அவர் செய்து கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆஸ்திரேலியாவின் கன்பராவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் உயிர் காக்கும் கருவிகளின் உதவியுடன் அவர் உயிருக்குப் போராடி வருகிறார் எனவும் ஆனால், சிகிச்சைக்கு அவரின் உடல் ஒத்துழைக்கவில்லை எனவும் நியூசிலாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உடலின் முக்கிய நரம்பு மண்டலத்தில் கிறிஸ் கெய்ர்ன்ஸுக்கு கிழிசல் ஏற்பட்டிருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன. இது குறித்து நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், கிறிஸ் கெய்ர்ன்ஸின் தனிப்பட்ட வாழ்க்கைக்கு மதிப்பு கொடுத்து அவர் குறித்த தகவல்களை பகிர விரும்பவில்லை என தெரிவித்துள்ளார்.

அவர் கிரிக்கெட் விளையாடிய காலத்தில் கிறிஸ் கெய்ர்ன்ஸ் ஒரு சிறந்த சகலதுறை வீரராக வலம் வந்தார், குறிப்பாக ஒரு நாள் போட்டிகளில் அவர் தனிச்சிறப்பான வீரராக விளங்கினார். கிறிஸ் கெய்ர்ன்ஸின் தந்தை லான்ஸும் நியூசிலாந்து தேசிய அணிக்காக விளையாடியவர்தான். தனது கிரிக்கெட் வாழ்வில் நியூசிலாந்து அணிக்காக 62 டெஸ்ட், 215 ஒரு நாள் போட்டிகள் மற்றும் இரண்டு ரி-20 போட்டிகளிலும் கிறிஸ் கெய்ர்ன்ஸ் விளையாடியுள்ளார். கிரிக்கெட் விளையாடுவதிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அவர் தொலைக்காட்சிகளில் கிரிக்கெட் வர்ணணை செய்பவராக மாறினார்.

ஐ.பி.எல். தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்தியாவில், கபில் தேவின் ஒருங்கிணைப்பில் இந்தியன் கிரிக்கெட் லீக் என்ற பெயரில் ரி-20 தொடர் நடைபெற்றது. இரண்டு சீசன் மட்டுமே விளையாடப்பட்ட இந்த போட்டிகளில் சண்டிகர் லயன்ஸ் என்ற அணியின் கப்டனாக கிறிஸ் கெய்ர்ன்ஸ் செயல்பட்டார். அப்போது நடைபெற்ற போட்டிகளில் கிறிஸ் கெய்ர்ன்ஸ் மீது சூதாட்டத்தில் ஈடுபட்டடார் எனக் குற்றம் சுமத்தப்பட்டது. பல சட்டப் போராட்டங்களுக்குப் பின்னர் அந்தக் குற்றச்சாட்டுகளைப் பொய்யாக்கி நிரபராதியாக வெளியே வந்தார் கிறிஸ் கெய்ர்ன்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது

# இன்று முதல் வரவேண்டாம் ஓய்வூதியத் திணைக்களத்துக்கு

நாட்டின் தொற்றுநோய் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஓய்வூதியத் திணைக்களத்துக்கு வருவோருக்கு இன்று முதல் மறு அறிவித்தல் வரை தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஓய்வூதிய திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.ஜகத் டி.டயஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் ஓய்வுபெற்றவர்கள் எந்த தகவலுக்கும் 1970 அவசர எண்ணை தொடர்பு கொள்ளுமாறும் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# ஆலயங்கள் முடக்கப்படாமல் இருப்பது இந்து மக்களின் பாரிய பொறுப்பு ஆகும்

## பிரதமரின் இந்துமத விவகார இணைப்பாளர் தெரிவிப்பு

தற்போது ஆலயங்களில் திருவிழாக்கள் சுகாதார விதிமுறைகளுக்கு மாறாக இடம்பெறுகின்றமையாலும் ஆலயங்கள் முடக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளமையாலும் ஆலய நிர்வாகத்தினரும் பக்தர்களும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமென பிரதமரின் இந்துமத விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

மட்டு மாமாங்கேஸ்வரர் ஆலயம் இரு வாரங்கள் முடக்கப்பட்டு ஆலய நிர்வாகத்தினரில் 5 பேர் பிணையில்விடுவிக்கப்பட்டமையும் நாம் அறிந்ததே. மேலும், பருத்தித்துறை சிவன் ஆலய அம்பாள் ஆலயத்தில் சுகாதார விதிமுறைகளை மீறி சுவாமி வெளி உலா வந்தது. இதனால் திருவிழா தடைப்பட்டது.

பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மூலம் மீண்டும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டது.

அத்தோடு, மட்டக்களப்பு ஐயங்கேணி வைரவர் ஆலயத்தில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறி தீமிதிப்பு இடம்பெற்றதால் ஆலய அறங்காவலர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அத்துடன், களுவங்கேணி மாரியம்மன் ஆலய உற்சவத்தில் பங்கேற்ற 114 பேருக்கு கொரோனாத் தொற்றிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

ஆகவே, இவற்றைக் கருத்திற்கொண்டு ஆலய நிர்வாகத்தினரும் பக்தர்களும் முடங்காத வண்ணம் சுகாதார விதிமுறைகளை முறையாகப் பின்பற்றி ஆலயங்களை முடக்காமல் பார்த்துக்கொள்வது எமது பொறுப்பாகும்.

மேலும், சில ஆலயங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாற்குட பவணி மக்கள் நலன்கருதி தற்காலிகமாகப் பிற்போடப்பட்டமையும் பாராட்டத்தக்கது.

# பால் மாவுக்காக விதிக்கப்பட்டுள்ள வரியை முழுமையாக நீக்க அனுமதி

இறக்குமதி செய்யப்படும் பால் மாவுக்காக விதிக்கப்பட்டுள்ள வரிகளை முழுமையாக நீக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில், அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார். சந்தையில் பால் மாவுக்கு ஓரளவு தட்டுப்பாடு உள்ளது. விலை அதிகரிப்பு தொடர்பான பிரச்சினையே இதற்குப் பிரதான காரணமாகும்.

இந்த நிலையில், இறக்குமதி பால் மாவுக்காக விதிக்கப்பட்டுள்ள வரிகளை முழுமையாக நீக்க அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

# கொரோனா சவால்களை வெற்றிகொள்வதில் பாதுகாப்புப் படையினர் சிறப்பான செயற்பாடு

## அதன் செயலாளர் புகழாரம்

கொவிட் -19 வைரஸ் பரவல் நிலைமைகளில் இருந்து மக்களைக் காப்பாற்றும் போராட்டத்தில் சுகாதாரத் தரப்பினரால் செய்ய முடியாத சேவையை பாதுகாப்புப் படையினர் செய்து காட்டியுள்ளனர் எனவும், சுகாதார வைத்திய துறையினரை விட வேகமாக தம்மால் மக்களுக்கு தடுப்பூசிகளை வழங்க முடிந்துள்ளதாகவும் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) தெரிவித்தார்.

இராணுவ தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் கூறினார்,

அவர் மேலும் கூறுகையில் -

கொவிட் -19 வைரஸ் தொற்றுநோய்ப் பரவலில் இருந்து மக்களைக் காப்பாற்ற ஜனாதிபதி சகல நாடுகளின் தலைவர்களுடனும் உரையாடி எமக்குத் தேவையான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுத்தார். ஆனால் தடுப்பூசிகள் கிடைத்தவுடன் வைத்திய துறையினர் போராட்டங்களை நடத்த ஆரம்பித்துவிட்டனர். வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டனர். இதனால் எமது மக்களே பாதிக்கப்பட்டனர்.

இவ்வாறான நிலையில் மக்களைப் பாதுகாக்க வேண்டி பாதுகாப்புப் படைகளின் உதவியை கொண்டு மக்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டத்தை முன்னெடுக்க ஜனாதிபதி தீர்மானித்தார்.

அந்த தீர்மானத்துக்கு அமையவே பாதுகாப்புப் படையினர் முன்னின்று இந்த சவால்களை வெற்றிகொள்ளும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.

சுகாதாரத் துறையினரால் செய்ய முடியாத விடயங்களை இன்று நாம் முன்னெடுத்து வருகின்றோம். சுகாதார வைத்திய துறையினரை விட வேகமாக எம்மால் மக்களுக்கு தடுப்பூசி வழங்க முடிந்துள்ளது. எமது படைகளில் உள்ள அனுபவம் மிக்க வைத்தியர்களை கொண்டே இந்த சேவையை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

ஆகவே, ஒன்றை மட்டுமே நாம் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். மக்களுக்கு பிரச்சினைகள், பாதிப்புகள் வரும் சகல சந்தர்ப்பங்களிலும் நாம் முன்னின்று மக்களைக் காப்பாற்றுவோம். எமது சேவையை எவராலும் தடுக்க முடியாது. - என்றார்.



# ஈழத் தமிழ் மக்கள் தொடர்பாக கேரள முதல்வரிடம் கோரிக்கை

இலங்கையில் உள்ள ஈழத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் சமதா கட்சி மற்றும் ஈழத் தமிழர் நட்புறவு மையம் ஆகியன இணைந்து கேரள முதலமைச்சர் பினராயி விஜயனை சந்தித்து கலந்துரையாடியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்திப்பின் போது இலங்கையில் உள்ள ஈழத்தமிழர்களின் துயரங்களுக்கு நிரந்தர தீர்வுக்கோரி 3 அம்சக் கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர்.

அந்த கோரிக்கைகள் பின்வருமாறு -

தமிழர்களின் தாயகமான தமிழீழம் அமைய வழி காண வேண்டும்.

ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை வன்முறைக்கு ஈடுசெய் நீதியைத் தேடுவது.

ஈழத் தமிழர்களின் தன்முடிவுரிமை கோரிக்கையை ஆதரிப்பது. ஆகிய 3 கோரிக்கைகளையும் மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது அனைத்தையும் கேட்டுக்கொண்ட பிரனாயி விஜயன் அதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநில முதலமைச்சர்களையும் சந்தித்து ஆதரவு திரட்ட இருப்பதாகவும், அதற்கான பணிகள் நடைபெறுகின்றன எனவும், இதன் முதற்கட்டமாக கேரள முதலமைச்சரை சந்தித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் சமதா கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர் என். ஏ. கோன், சமதா கட்சியின் தமிழ் நாடு மாநிலப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் மணிவண்ணன், ஈழத்தமிழர் நட்புறவு மைய பிரதிநிதிகள் பேராசிரியர் ராமு.மணிவண்ணன் மற்றும் பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சுயாதீன தகவல் உரிமை ஆணைக்குழுவை இலங்கையில் உருவாக்க அழைப்பு விடுப்பு

எதிர்வரும் செப்டெம்பரில், இலங்கையில் சுயாதீன தகவல் உரிமை ஆணைக்குழுவை உருவாக்குமாறு, இலங்கை, டிரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கையின் தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஆர்.ரிஐ. என்ற ஆணைக்குழுவின் பதவிக் காலம் இந்த ஆண்டு செப்டெம்பரில் முடிவடைகிறது.

இதனையடுத்தே, 2016 ஆம் ஆண்டின் 12 ஆவது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு ஏற்ப புதிய ஆணையாளர்களை நியமிக்குமாறு, இலங்கை டிரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆர்.ரி.ஐ. சட்டத்தின்கீழ், ஆர்.ரி.ஐ. என்ற, தகவல் அறியும் ஆணைக்குழு நிறுவப்பட்டது. இதில் ஒரு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் ஐந்து வருடகாலத்துக்கு சேவை செய்கிறார்கள். அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், அரசமைப்பு பேரவையின் பரிந்துரைகளின் பேரில் ஜனாதிபதியால் நியமனங்கள் செய்யப்பட்டன.

இருப்பினும், 20 ஆவது திருத்தம், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு நியமிக்கப்படும் முறையை மாற்றியுள்ளது. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசமைப்பு பேரவை இனி செயற்படாது மற்றும் நாடாளுமன்ற பேரவையே இயங்குகிறது.

எனவே, ஆர்.ரி.ஐ. ஆணைக்குழுவின் பதவிகளை நிரப்புவதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், வெளியீட்டாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மற்றும் பிற பொது சமூக அமைப்புகளிடமிருந்து நாடாளுமன்ற பேரவை, பரிந்துரைகளைப் பெறுகிறது.

இது தொடர்பாக இலங்கை, டிரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் அமைப்பின் பணிப்பாளர் நடிசானி பெரேரா கருத்துரைத்துள்ளார். கடந்த 5 ஆண்டுகளில் இலங்கையின் தகவல் அறியும் உரிமை ஆணையம் மக்களின் தகவல் அறியும் உரிமையைப் பாதுகாக்கும் பாராட்டுக்குரிய முடிவுகளை வழங்கியது.

தகவல் அறியும் ஆணைக்குழு ஒரு சுதந்திர அமைப்பாக அதன் திறனில் செயல்பட்டதால் அதனால் இதைச் செய்ய முடிந்தது.

இந்த நிலையில், ஆணையத்தின் சுயாதீனமான தன்மையை உறுதிசெய்து, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விதிகளுக்கு ஏற்ப, புதிய ஆணையாளர்களை, ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு நியமிப்பார் என்று இலங்கை, டிரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.08.2021இல் வெளியிடப்பெற்றது.